ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,888—1970 ජනවාරි 9 වැනි සිකුරාදා—1970.1.9

14,888 ம் இலக்கம்—1970 ம் ஆண்டு சனவரி மாதம் 9 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி IV — உள்ளூராட்சி

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேருகக் கோவை செய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.]


| | பக்கம் |
|---|---|
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் .. .. | 7 |
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும், பிறவும் .. | — |
| துணை விதிகள் .. .. .. | — |
| உள்ளூராட்சி அதிகார நிலையத் தேர்தற் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் .. .. .. | — |
| வரவு செலவுக் கூற்றுக்கள் .. .. .. | — |
| வரவு செலவுத் திட்டங்கள் .. .. .. | — |
| ஆதன விற்பனைகள் .. .. .. | — |
| விதிச செயற்குழுவின் அறிவித்தல்கள் .. | — |
| நானாவித அறிவித்தல்கள் .. .. .. | 8 |


## உள்ளூராட்சி அறிவித்தல்கள்

### பட்டின சபைகள் கட்டளைச் சட்டம்

**பிரிவு 17 (1) ன் படியான அறிவித்தல்**

1961 ம் வருடத்தின் 60 ம் இலக்க அதிகாரச் சட்டத்தால் திருத்தப்பட்டபடியான பட்டின சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 256) பிரிவு 17 (1) ல் எனக்கு உரித்தாக்கப்பட்ட அதிகார பலத்தைக் கொண்டு சிலாபம்–புத்தளம் பிரிவு உள்ளூராட்சி உதவி ஆணையாளர், லியனஜே ஜோர்ஜ் எட்வெட் விக்கிரமசேகர ஆகிய நான் இதன் அட்டவணையின் பத்தி 1 ல் குறிக்கப்பட்டுள்ள பட்டின சபையின் முதலாவது கூட்டத்தை அச்சபையின் பெயருக்கெதிரே அதே அட்டவணையின் பத்தி 2 ல் குறிக்கப்பட்டுள்ள திகதியில் அவ்வட்டவணையின் பத்தி 3 ல் குறிக்கப்பட்டுள்ள நேரத்தில் அதே அட்டவணையின் பத்தி 4 ல் குறிக்கப்பட்டுள்ளஇடத்தில் இத்தால் கூட்டுகிறேன்.

லி. ஜோ. எ. விக்கிரமசேகர,
உள்ளூராட்சி உதவி ஆணையாளர்,
(சிலாபம்–புத்தளம்).

உள்ளூராட்சி அமைச்சு,
(சிலாபம்–புத்தளம்) காரியாலயம்,
சிலாபம், 31.12.69.

*அட்டவணை*

| பத்தி 1 பட்டின சபையின் பெயர் | பத்தி 2 திகதி | பத்தி 3 நேரம் | பத்தி 4 இடம் |
|---|---|---|---|
| நாத்தாண்டி | 18.1.1970 | மு.ப. 10.00 | நாத்தாண்டி பட்டின சபை காரியாலயம் |

1–220—9.1.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,888

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானிகளில் அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்கு திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகன்.

அரசாங்க அச்சகப் பகுதி,
கொழும்பு,
1969 ம் ஆு திசெம்பர் மீ 14 ந் உ.

# நாளுவித அறிவித்தல்கள்

## முள்ளியவளை கிராமசபை

### இறைச்சிக்காரர் பற்றிய சட்ட அறிவித்தல்

இறைச்சிக்காரர் பற்றிய சட்டம் (அத்தியாயம் 272) 7 ம் பிரிவின் தாற்பரியப்படி இதன் கீழ் காணப்படும் அட்டவணையில் காண்பவர் களிடமிருந்து 1970 ம் ஆண்டுக்கு இறைச்சிக்கடைக்கு லைசென்ஸ் தரும்படி விண்ணப்பம் கிடைக்கப்பட்டிருக்கிறது.

இந்த கிராமசபை இடப்பரப்பில் வசிப்போர் எவரேனும் லைசென்ஸ் கொடுப்பதை மறுக்க விரும்பினுல் மறுப்புக்கான காரணங்களை இந்த அறிவித்தல் " கெசற்றில் " பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து பதினுலு நாட்களுக்கிடையில் இணைப் பிரதிகளாக எமக்கு அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

அட்டவணை

| விண்ணணப்பகாரரின் பெயர் | வியாபாரத்தின் தன்மை | வியாபாரம் செய்யுமிடம் |
|---|---|---|
| மு. த. மு. சரீபு .. | மாட்டிறைச்சி .. | தண்ணீரூற்று |
| மு. த. மு. சரீபு .. | மாட்டிறைச்சி .. | முள்ளியவளைச் சந்தை 4 ம் இலக்க கடை |
| மு. த. மு. சரீபு .. | ஆட்டிறைச்சி .. | தண்ணீரூற்றுச் சந்தை 2 ம் இலக்க கடை |
| மு. த. மு. சரீபு .. | ஆட்டிறைச்சி .. | முள்ளியவளைச் சந்தை 3 ம் இலக்க கடை |

மு. அரியகுட்டி, ஜே.பி.,
தலைவர்,
கிராமசபை—முள்ளியவளை.

கிராமசபை அலுவலகம்,
முள்ளியவளை, 29.12.69.

1—369—9.1.70 ந் திகதிய வர்த்தமானி இல.14,888

---

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

### ஊன்விளைஞர் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 272)

ஊன்விளைஞர் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 272) 17 (1) ம் பிரிவின் கீழ் எனக்கு உரிமையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் காரணமாக, யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள யாழ்ப்பாண மாநகராட்சி மன்றத்தின் மேயராகிய சின்னத்தம்பி நாகராஜா ஆகிய யான், தகுந்த அதிகாரியாக இருப்பதால், இதன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப் பட்டுள்ள திகதிகளில், 1970 ம் வருடத்தில், யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற நிர்வாக எல்லைக்குள் மிருகங்களைக் கொல்வதை அல்லது இறைச்சியின் விற்பனையை அல்லது விற்பனைக்கான இறைச்சியை பார்வைக்கு வெளிக்காட்டுவதை இத்தால் தடை செய்கின்றேன்.

அட்டவணை

| | | | |
|---|---|---|---|
| ஜனவரி | 1970 | — | 2, 9, 16, 23, 30 |
| பெப்ருவரி | 1970 | — | 6, 13, 20, 27 |
| மார்ச் | 1970 | — | 6, 13, 20, 27 |
| ஏப்பிரல் | 1970 | — | 3, 10, 17, 24 |
| மே | 1970 | — | 1, 8, 15, 22, 29 |
| ஜூன் | 1970 | — | 5, 12, 19, 26 |
| ஜூலை | 1970 | — | 3, 10, 17, 24, 31 |
| ஆகஸ்ட் | 1970 | — | 7, 14, 21, 28 |
| செப்டம்பர் | 1970 | — | 4, 11, 18, 25 |
| அக்டோபர் | 1970 | — | 2, 9, 16, 23, 30 |
| நவம்பர் | 1970 | — | 6, 13, 20, 27 |
| டிசம்பர் | 1970 | — | 4, 11, 18, 25 |

சின்னத்தம்பி நாகராஜா,
மேயர், யாழ்ப்பாணம்.

மாநகராட்சி மன்றம்,
யாழ்ப்பாணம்,
31.12.69.

1—374—9.1.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,888

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கை அரசாங்க வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கை அரசாங்க வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிக்கபபட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களை பிரசுரிக்க விருப்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சகத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

அரசாங்க வர்த்தமானிகளுக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ள மாட்டார்.**

### அட்டவணை—1970

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | | |
|---|---|---|---|---|---|---|
| சனவரி .. .. | 2.1.70 | வெள்ளி .. | 26.12.69 | வெள்ளி | பி. ப. | 3.30 |
| | 9.1.70 | வெள்ளி .. | 2. 1.70 | வெள்ளி | பி. ப. | 3.30 |
| | 16.1.70 | வெள்ளி .. | 8. 1.70 | வியாழன் | பி. ப. | 3.30 |
| | 23.1.70 | வெள்ளி .. | 16. 1.70 | வெள்ளி | ந. ப. | 12.00 |
| | 29.1.70 | வியாழன் .. | 21. 1.70 | புதன் | ந. ப. | 12.00 |
| பெப்புருவரி .. | 5.2.70 | வியாழன் .. | 28. 1.70 | புதன் | பி. ப. | 3.30 |
| | 13.2.70 | வெள்ளி .. | 5. 2.70 | வியாழன் | ந. ப. | 12.00 |
| | 20.2.70 | வெள்ளி .. | 13. 2.70 | வெள்ளி | பி. ப. | 3.30 |
| | 27.2.70 | வெள்ளி .. | 20. 2.70 | வெள்ளி | ந. ப. | 12.00 |
| மாச்சு .. .. | 5.3.70 | வியாழன் .. | 27. 2.70 | வெள்ளி | ந. ப. | 12.00 |
| | 13.3.70 | வெள்ளி .. | 5. 3.70 | வியாழன் | பி. ப. | 3.30 |
| | 20.3.70 | வெள்ளி .. | 13. 3.70 | வெள்ளி | பி. ப. | 3.30 |
| | 26.3.70 | வியாழன் .. | 20. 3.70 | வெள்ளி | பி. ப. | 3.30 |

அரசாங்க அச்சகப் பகுதி,
கொழும்பு,
1969 ஆம் ஆண்டு திசெம்பர் மீ 12 ஆந் உ.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகன்.

இலங்கை அரசாங்க அச்சகப் பகுதியிற் பதிப்பிக்கப்பெற்றது.